## கமத்தொழில் அபிவிருத்தி நிதியம் - 2016

---

கமத்தொழில் அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 97(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நிமயங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கமத்தொழில் அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜலதாரா எல்பம் இருப்புக் கணக்கும் ஜலதாரா கையேடு இருப்புக் கணக்கும் முறையே ரூபா 112,000 இனாலும் ரூபா 773,760 இனாலும் அதிகரித்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 93,740 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் சொத்துக்களாகக் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் ஆண்டின் செலவினமாக வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக அலுவலக உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 9,374 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் காசு மீதிக்கும் திறைசேரி புத்தகங்களின் படியான காசு மீதிக்குமிடையே 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இருந்துவரும் ரூபா 651,798 ஆன வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜப்பானிய யென் நன்கொடை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்திற்காக மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட தவணைப் பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதியை அபிவிருத்திப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பெறுமதியுடன் ஒப்பீடு செய்தபோது ரூபா 93,750 தொகையான வேறுபாடொன்று அவானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஏக்கர் வரி வருமானம் ரூபா 26,136,708 ஆக இருந்த போதிலும் அபிவிருத்திப் பிரிவின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அது ரூபா 22,101,511 ஆனமையால் ரூபா 4,035,197 வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஈ) அனுமதிப்பத்திரக் கட்டண வருமான பெறுவனவு உறுதிச்சீட்டின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றினை ஒப்பீடு செய்தபோது ரூபா 359,733 வேறுபாடொன்று காணப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 ஆம் ஆண்டின் போது கமநல சேவை நிலையங்கள் மற்றும் விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்த உழவு இயந்திரம், இழுவைப் பெட்டிகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தவணைப் பணம் ரூபா 1,445,025 ஆக இருந்ததுடன் அதனை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வனாத்தவில்லு மரபணு ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் போது நிதியத்தால் மீள அறவிடும் அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 543,000 தொகையான முற்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) யப்பான் யென் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சினால் பகிர்ந்தளிக்கப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் நீர்ப் பம்பிக்கான தவணைப் பண அறவிடல் மிக மந்த நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவைத் தவணைப் பணம் ரூபா 388,184,868 ஆக இருந்தது. இந்த நிலுவைத் தவணைப்பணத்தில் உள்ளடங்கியுள்ள 16 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட 02 சக்கர உழவு இயந்திரங்கள் 491 மற்றும் 22 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட 04 சக்கர உழவு இயந்திரங்கள் 473 என்பவைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 11,663,259 மற்றும் ரூபா 123,615,421 தொகைகள் நிலுவையாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் இருந்த உழவு இயந்திரத்திற்காக எந்தத் தவணைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டின் போது 03 மாவட்டங்களின் விவசாயிகளுக்கும் விவசாய அமைப்புக்களுக்கும் வழங்கப்பட்டிருந்த 85 நீர்ப்பம்பிகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 201,405 நிலுவையாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் இந்த நீர்ப் பம்பிகளுக்காக எந்தத் தவணைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் (ஆ) பிரிவின் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட முற்பணம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 16 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 6,343,175 கூட்டுமொத்தமான முற்பணமும் 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் நடைமுறைப் பொறுப்பாக காண்பிக்கப்பட்ட ரூபா 10,746,805 கூட்டுத்தொகையான விசிறும் இயந்திர வைப்புக் கணக்கினதும் புள்டோசர் சேவை வைப்புக் கணக்கினதும் மீதிகள் 2015 ஆம் ஆண்டின் வருமானமாகவும் மோட்டார் சைக்கிள் தவணை வைப்புக் கணக்கின் ரூபா 1,214,466 மீதி மீளாய்வாண்டின் வருமானமாகவும் எவ்வித அதிகாரமுமின்றி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 54,228,626 ஆன மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 30,368,913 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 23,859,713 ஆன அதிகரிப்பு காணப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 13,772,215 இனால் அதிகரித்தமையும் உழவு இயந்திரம் இழுவைப் பெட்டிகளின் வருமானம் ரூபா 17,159,610 இனால் அதிகரித்தமையும் நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 97 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் பிரதான நோக்கமாக புதிய கமத்தொழில் கொள்கையினை அமுல்படுத்துதல், வழங்கல்களை மேம்படுத்துதலும் அபிவிருத்தி செய்தலும், கமநல சேவை நிலையங்களை நிர்வகித்தலும் அபிவிருத்தி செய்தலும், நிலையங்களின் கட்டிடங்கள், உபகரணங்களையும் வாகனங்களையும் பராமரித்தல் மற்றும் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல் என்பன காணப்பிக்கப்பட்டிருந்தன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் கமலநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்காக ரூபா 1 மில்லியன் தொகையும் நீர் முகாமைத்துவம் தொடர்பான வெளியீடுகளைத் தயாரிப்பதற்காக ரூபா 0.5 மில்லியன் தொகையும் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த மொத்தத் தொகையான ரூபா 1.5 மில்லியனையும் பயன்படுத்தி கமநல சட்டக் கையேட்டை அச்சிடுவதற்காக மீளாய்வாண்டின் மே 26 ஆந் திகதி கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2017 மே 29 ஆந் திகதி வரையிலும் அதன் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறிப்பாகத் தீர்மானிக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்ட செயல்நடைமுறைகளோ அல்லது வழிகாட்டிக் கோவையோ இன்றி மீளாய்வாண்டில் வயல் காணியற்றதாக 522 சான்றிதழ் பத்திரங்களும் வயல் காணியை விவசாய பயிர்ச் செய்கை தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு 596 அனுமதிப்பத்திரங்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் இனங்காணப்பட்டிருந்த ரூபா 450,000 தொகையான இருப்புப் பற்றாக்குறையை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அந்நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்காமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் அத்தொகை இருப்புப் பற்றாக்குறையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பெறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின்போது பாதிடப்பட்ட வருமானங்களையும் செலவினங்களையும் உள்ளவாறான வருமானங்களுடனும் செலவினங்களுடனும் ஒப்பீடு செய்த போது 27 சதவீதம் முதல் 774 சதவீதம் வரையிலான குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைக்கட்டுப்பாட்டுக் கருவியாக உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை இனங்கண்டு மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் கமநல சேவை நிலையங்களில் விற்பனை அபிவிருத்தி மற்றும் திருத்த நடவடிக்கைகளுக்காக ரூபா 14,202,267 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பாக திணைக்களம் உரிய மேற்பார்வையொன்றை மேற்கொண்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | இனங்காணப்படாமல் கணக்கு மீதிகளை நிதியத்திற்கு செலவு வைத்தல் |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு செய்யப்பட்ட வருமானங்களுக்கும் செலவினங்களுக்கும் மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கும் செலவினங்களுக்கும் இடையே முரண்கள் காணப்பட்டமை. |
| (இ) நிதிக் கட்டுப்பாடு | (i) 2008 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற திறைசேரிப் புத்தகங்களின் படியான மீதியினதும் நிதியத்தின் காசு மீதியினதும் வேறுபாடுகள் தீர்க்கப்படாமை. |
| | (ii) 1995 ஆம் ஆண்டு முதல் நிலுவை உழவு இயந்திர கடன் தவணை பணம் அறவிடப்படாமை. |